எனது இல. :- **5/4/1/04/2025 (20)**
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.
**2026.08.**

அஹதிய்யாப் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர்களுக்கு,

**இஸ்லாம் தீனியாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்ப் பரீட்சை - 2025 (2026)**
**விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

---

**2026 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவிருக்கும் அறிவித்தல் மீதான தங்களது கவனத்தை ஈர்ப்பதுடன், விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

02. மேற்குறித்த பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ள அதேவேளை விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு மூலப் பிரதி **“பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை.”** எனும் முகவரிக்கு **2026 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியவாறு **பதிவுத் தபாலில்** அனுப்பி வைக்க வேண்டும். இரண்டாம் பிரதியை உங்களது அஹதிய்யாப் பாடசாலையின் / அரபுக் கல்லூரியின் கோப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். காலம் கடந்த அல்லது பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதனால் விண்ணப்பப்படிவங்களை சரியான முறையில் பூரணப்படுத்தி குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

03. விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு **2.1** இன் கீழுள்ள கூட்டில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். தலைப்பு **2.0** இன் கீழ் உங்களது அஹதிய்யாப் பாடசாலைக்கு / அரபுக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ள **06** இலக்கங்களைக் கொண்ட கணனி இலக்கத்தினை **(SCHOOL NO.)** குறிப்பிடல் வேண்டும்.

04. வெயிவாரிப் பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அவ்வாறான பரீட்சார்த்திகள் அவர்களது வதிவிடத்திற்கு அருகாமையிலுள்ள அஹதிய்யாப் பாடசாலை / அரபுக் கல்லூரி மூலமாகவே பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும். எனவே உங்களது பிரதேசத்தில் எவரேனும் வெளிவாரிப் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் சந்தர்ப்பத்தில் அவரது தகைமைகள் **2026 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி** பிரசுரிக்கப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு, அவரிடமிருந்து உரிய பரீட்சைக் கட்டணத்தை அறவிட்டு உங்களது அஹதிய்யாப் பாடசாலை / அரபுக் கல்லூரி மூலம் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்குமாறு விஷேடமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

05. முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர். இரண்டாவது தடைவ அல்லது அதற்குப் பின்னர் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் மற்றும் வெளிவாரிப் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணமாக **ரூபா. 200/-** இனை செலுத்துவதோடு நூன சித்தி பெற்ற ஒரு பாடத்திற்கான கட்டணமாக **ரூபா. 50/-** இனையும் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய பரீட்சார்த்திகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பரீட்சைக் கட்டணங்களை மொத்தமாக சேகரித்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் **20-03-02-13** இற்கு வைப்பாகும் வகையில் இலங்கையிலுள்ள எந்தவொரு தபால் நிலையத்திலும் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை **(Photo Copy)** உங்களது அஹதிய்யாப் பாடசாலையின் / அரபுக் கல்லூரியின் கோப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். **(முத்திரை அல்லது காசுக்கட்டளை மூலம் செலுத்தப்படும் பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.)**

06. உங்களது அஹதிய்யாப் பாடசாலையின் மூலம் / அரபுக் கல்லூரியின் மூலம் உண்மையிலேயே பரீட்சைக்குத் தோற்ற ஆர்வமாகவுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் விண்ணப்பதாரர்களின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் பூரணப்படுத்தப்பட்ட ஏனைய விடயங்கள் சரியானவையா என்பதனை உறுதி செய்து கொண்டதன் பின்னர் விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட அனுமதி வழங்குமாறும் விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

07. விஷேட தேவையுடைய பரீட்சார்த்தியொருவர் உங்களது அஹதிய்யாப் பாடசாலை / அரபுக் கல்லூரி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவாராயின் அவரது விஷேட தேவையின் தன்மையினை எழுத்து மூலம் குறிப்பிட்டு அதற்கான வைத்திய சான்றிதழ்களையும் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு :** பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சாரத்திகளும் இப் பரீட்சைக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அஹதிய்யாப் பாடசாலை / அரபுக் கல்லூரி அதிபர்களின் பொறுப்பாகும். தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்கள் இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

சுஜீவ விஜேரத்ன
பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஒழுங்கமைப்பு)
பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்காக